**சுருக்கம்**

சட்டக் கல்வித் துறை – விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் புதிதாக அரசு சட்டக்கல்லூரிகள் துவக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**சட்ட (சக)த் துறை**

அரசாணை (நிலை) எண்.230

நாள். 25.05.2017
ஹேவிளம்பி – வைகாசி –11
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண் 1000/அ1/2017, நாள் 05.05.2017 மற்றும் 16.05.2017.

– – – –

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் சட்டக் கல்வி இயக்குநர், மற்றவற்றுக்கிடையே, விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களைச் சேர்ந்த சட்டம் பயில விரும்பும் மாணவர்களுக்கு அரசு சட்டக் கல்லூரி ஏதும் இல்லையென்பதால், இம்மாவட்டங்களைச் சேர்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் பலர் இருப்பினும் மிகுந்த போட்டிகளுக்கிடையில், மிகக் குறைந்த அளவில் தங்களது இருப்பிடத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்கு சென்று சிரமப்பட்டு பயில்வதாகத் தெரிவித்துள்ளார்.

2. சட்டக் கல்வி இயக்குநர் மேலும் தனது கடிதத்தில், விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் மாவட்ட முதன்மை நீதிமன்றங்கள் உள்ளதாகவும், அந்நகரங்களுக்கு மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் உள்ளதாகவும் தெரிவித்து, மேற்சொன்ன நகரங்களில் புதிதாக ஒரு அரசு சட்டக்கல்லூரி துவக்கினால் விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களைச் சேர்ந்த சட்டம் பயில விரும்பும் மாணவர்கள் பயன்பெறுவர் எனத் தெரிவித்து, மேற்சொன்ன நகரங்களில் புதிதாக அரசு சட்டக் கல்லூரிகள் நிறுவலாம் என பரிந்துரைத்துள்ளார்.

3. சட்டக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம் நகரம், தருமபுரி மாவட்டம் – தருமபுரி நகரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம் நகரம் ஆகிய மூன்று நகரங்களில் 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் 3 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் 80 மாணவர்களுடனும் மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் 80 மாணவர்களுடனும் தலா ஒரு அரசு சட்டக்கல்லூரியினை துவக்க ஆணையிடுகிறது.

4. விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் நகரங்களில் அரசு சட்டக்கல்லூரிகள் துவக்குவதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை கவனித்திடும் பொருட்டு, பின்வருமாறு தனி அலுவலர்களை (Special Officers) நியமித்து அரசு ஆணையிடுகிறது. தனி அலுவலர்கள் அரசு சட்டக் கல்லூரி துவக்குதல் தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் குறித்த அறிக்கையினை, சட்டக்கல்வி இயக்குநர் வழியாக அரசுக்கு சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:-

| | |
|---|---|
| அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம் | முனைவர் எஸ்.முருகேசன், உதவிப் பேராசிரியர், அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. |
| அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி | திரு. ப.சிவதாஸ், உதவிப் பேராசிரியர், அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். |
| அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம் | முனைவர் என்.இராமபிரான் ரஞ்சித் சிங், உதவிப் பேராசிரியர், அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. |

5. மேற்சொன்ன அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் இணைவு மற்றும் இந்திய வழக்குரைஞர் மாமன்றத்தின் ஒப்புதலினைப் பெற உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்(பொ)

பெறுநர்

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை – 600 028.

நகல்

1. மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாநில கணக்காயர், சென்னை – 600 018/600 035.
4. இருப்பிடத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ. / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.